**ஆட்டிஸம் பி.டி.டி. உள்ள குழந்தைகளுக்கான திட்டத்தில் உள்ள பொது விதிகள்:**

1. பிள்ளையின் உயரத்திற்கு உட்காருங்கள்.
2. பிள்ளையின் கையை அவ்வப்போது தொட்டு அவரது கவனத்தை மீண்டும் பெறுங்கள்.
3. பிள்ளையின் பெயரை அவ்வப்போது கூறுங்கள்.
4. 2 3 வார்த்தைகள் கொண்ட வாக்கியங்கள் பாவித்து முக்கிய அல்லது செயலோடு சம்மந்தமான வார்த்தைகளில் கவனம் செலுத்துங்கள்.
   (உ.ம்) அகமத் பந்தை உருட்டுங்கள்
5. பிள்ளையின் செய்கைகளை விமர்சித்து பெயரிடுங்கள்.(அவ்வாறே மற்ற பிள்ளைகளின் செய்கைகளையும் விமர்சியுங்கள்)
6. நம்பிக்கையாய் இருங்கள். பிள்ளையின் ஒவ்வொரு திறனையும் முயற்சியையும் முக்கியத்துவம் காட்டி பலப்படுத்துங்கள்.
   (உ.ம்) கேவன் பஸில் விளையாடுவதில் திறமையானவர்
7. குழந்தை சொல்லும் விஷயத்தை திரும்ப திரும்ப கூறி பலப்படுத்துவதோடு அதிகப்படுத்துங்கள்.
   (உ.ம்) பிள்ளை    கா போ
   நீங்கள்    கார் போ
   நீங்கள்    சிவப்பு கார் போ
8. பிள்ளை நீங்கள் சொல்வதை கிளி போல் திரும்ப திரும்ப சொன்னால் அதற்கு பெயர் கிளிபேச்சு.
   (உ.ம்) நீங்கள்    உங்களுக்கு இன்னும் கொஞ்சம் ஜூஸ் வேண்டுமா?
   பிள்ளை    உங்களுக்கு இன்னும் கொஞ்சம் ஜூஸ் வேண்டுமா?
   அ. சிறு சொற்றொடர்கள் திரும்ப கூறினால் அர்த்தம் தருபவையை பாவியுங்கள்
   நீங்கள்    ஜூஸ் வேணும்?
   பிள்ளை    ஜூஸ் வேணும்?
   ஆ. தாமதித்த கிளிபேச்சை புறக்கணியுங்கள்
9. உங்களது முகக்குறிகளை மிகைபடபடுத்துங்கள் (விரிந்த கண்கள்,உயர்த்திய புருவங்கள்)
10. உடற் சாடைகளை பாவியுங்கள்(சுட்டிக் காட்டுதல், கை அசைவுகள்)
11. பொருள், படங்கள் காண்பியுங்கள்
12. வேடிக்கையாய் இருங்கள்